

உலக மாக்கவி பெருங்கவிக்கோ பேராலயம் திறப்புவிழா அழைப்பிதழை மேனாள் அமைச்சர் இராசகண்ணப்பன் திருக்கரத்தில் தமிழ் மாமணி வா.மு.சே.திருவள்ளுவர், கணிஞர் வா.மு.சே.கவியரசன், பேராசிரியர் ஆண்டவர், பொறிஞர் தமிழ் மணிகண்டன் ஆகியோர் வழங்கினர்.



வேலூர் மாவட்டம் காட்பாடி கழிஞ்சூரில் உள்ள தி.மு.க. அலுவலகத்தில் நடந்த இலவச கண் சிகிச்சை முகாமை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் தொடங்கி வைத்தார். அருகில் மாநகராட்சி துணை மேயரும், தெற்கு பகுதி செயலாளருமான எம். சுனில்குமார், லயன்ஸ் கிளப் சங்க தலைவர் அருள்ஜோதி, மாவட்டப் பொருளாளர் சி. நரசிம்மன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வேலூர் மாவட்டம்

# காட்பாடி கழிஞ்சூரில் இலவச கண் சிகிச்சை முகாம்!

## வடக்கு மாவட்டப் பொறுப்பாளர்- டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. தொடங்கி வைத்தார்!

வேலூர், ஜூலை 2 -
வேலூர் மாவட்டம் காட்பாடி கழிஞ்சூரில் உள்ள தி.மு.க. அலுவலகத்தில் நடந்த இலவச கண் சிகிச்சைமுகாமை நாடாளுமன்ற உறுப்பினர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர்ஆனந்த் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சிக்கு வேலூர் புரபஷனல்லயன்ஸ்சங்க தலைவர் ஏ.அருள்ஜோதி தலைமை தாங்கினார்.

முகாமில் கண்பரிசோதனை செய்யப்பட்டு நோயாளிகளுக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

நோயாளிகளுக்கு சி. எம்.சி. மருத்துவ மனை டாக்டர்கள் கண் சிகிச்சை அளித்தனர்.

நிகழ்ச்சியில் மாநகராட்சி துணை மேயரும், தெற்கு பகுதி செயலாளருமான எம். சுனில்குமார், மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன், மாநகர துணை செயலாளர் ஒய். தேவநேசன், வட்ட செயலாளர்கள்கே. என். இளங்கோ,

சி.அரிகிருஷ்ணன், எம். எஸ்.கெஜராஜ், மாநகர மாணவர்அணிஅமைப்பாளர் மகேஷ்பாபு, மாநகர சுற்றுசூழல் அணி அமைப்பாளர் கே. ஏ. நவீன் குமார், மாமன்ற உறுப்பினர் சரண்யா, தலைமை கழக பேச்சாளர் கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள், கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளைவேலூர் மாவட்ட பார்வையிழப்புதடுப்புசங்கம், புரபஷனல் சங்கம், வேலூர் சி. எம்.சி. கண் மருத்துவ மனை ஆகியவை செய்திருந்தன.

# திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் த.வெ.க. ஆட்சியின் நிர்வாகச் சீர்கேடு எதிரொலி!

## தொடர் மின்வெட்டால் கொதித்த பொதுமக்கள் – நள்ளிரவில் சாலை மறியல் போராட்டம்!

திருவள்ளூர், ஜூலை 2-
திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அருகே தொடர்ச்சியாக நீடித்து வரும் மின்வெட்டு, பொதுமக்களின் பொறுமையை சோதிக்கும் அளவுக்கு மோசமடைந்துள்ளதாக குற்றச் சாட்டுகள் எழுந்துள்ளன. பலமுறை புகார் அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக் கூறி, ஆத்திரமடைந்த பொதுமக்கள் நள்ளிரவில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவம், த.வெ.க. அரசின் நிர்வாகத் திறனின்மை மற்றும் மின் வாரியத்தின் செயல்பாடு குறித்து கடும் கேள்விகளை எழுப்பியுள்ளது.

பொன்னேரி அடுத்த கிருஷ்ணாபுரம் பகுதியில் கடந்த சில நாட்களாக பகல், இரவு பாராமல் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக இரவு நேரங்களில் பல மணி நேரம் மின்சாரம் இல்லாததால் குழந்தைகள், முதியோர், நோயாளிகள், மாணவர்கள் மற்றும் வேலைக்குச் செல்வோர் என அனைத்து தரப்பினரும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை இரவு சுமார் 9 மணியளவில் ஏற்பட்ட மின்தடை, நள்ளிரவு 12 மணி வரை நீடித்த தாகக் கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் பொன்னேரி-செங்குன்றம் சாலையில் திடீரென சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் 30 நிமிடங்கள் நடைபெற்ற இந்தப் போராட்டத்தால் அந்தப் பகுதியில் போக்குவரத்து முழுமையாக பாதிக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் கூறுகையில், மின்வாரிய அதிகாரிகளை பலமுறை தொடர்பு கொண்டபோதும், பிரச்சினைக்கு தீர்வு கூறாமல், “மின்தடை தொடர்ந்து இருந்தால் உங்கள் வீட்டிற்கு இன்வெர்ட்டர் வாங்கிக் கொள்ளுங்கள்” என அலட்சியமாக பதிலளித்ததாக குற்றம் சாட்டினர். மக்களின் துயரத்தை உணராமல் அதிகாரிகள் செயல் படுவதாகவும் அவர்கள் வேதனை தெரிவித்தனர்.

“இரவு முழுவதும் தூங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சிறு குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவரும் மின்வெட்டால் கடுமையாக அவதிப் படுகின்றனர். பலமுறை புகார் அளித்தும் அரசும் அதிகாரிகளும் எங்களது பிரச்சினையை கண்டு கொள்ளவில்லை” என்று போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் ஆதங்கம் தெரிவித்தனர்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியான மின்வெட்டு குறித்த புகார்கள் அதிகரித்து வரும் நிலையில், அத்தியாவசியமான மின்சார சேவையைக் கூட சீராக வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் விமர்சித்து வருகின்றன. மக்களின் அன்றாட வாழ்க்கையை முடக்கிவரும் இந்தப் பிரச்சினைக்கு உடனடி மற்றும் நிரந்தரத் தீர்வு காணாமல் அரசு அலட்சியமாக செயல்படுகிறது என்ற குற்ற ச்சாட்டும் வலுத்து வருகிறது.

பொதுமக்களின் அடிப்படைத் தேவையான மின்சார விநியோகத்தைக் கூட உறுதி செய்ய முடியாத நிலை உருவாகியிருப்பது, த.வெ.க. அரசின் நிர்வாகத் திறனை கேள்விக்குறியாக்கியுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் கருத்துகள் எழுந்துள்ளன. தொடர்ச்சியான மின்வெட்டு, அதிகாரிகளின் அலட்சிய அணுகுமுறை, தீர்வு காணப்படாத புகார்கள் ஆகியவை இணைந்து, ஆட்சியின் செயல்பாடு மீதான மக்களின் அதிருப்தியை மேலும் தீவிரப்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

### தமிழ்நாடு சட்டம் ஒழுங்கு!

# சாட்டையை சுழற்ற வேண்டிய முதல்வர் விஜய், ஊருக்கு உபதேசம் செய்கிறார்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஜூலை 2 –
தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு சீர் கெட்டுப் போயுள்ள நிலையில் சாட்டையை சுழற்ற வேண்டிய முதல்வர் ஊருக்கு உபதேசம் செய்யும் வேலையில் ஈடுபட்டுள்ளார். என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது..


அது வருமாறு:–

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் விஜய் தலைமையில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளுடனான இரண்டு நாள் மாநாடு நடந்து கொண்டு இருக்கும் வேளையில் தமிழ்நாடு முழுவதும் ஒரே நாளில் 9 கொலைகள் நடந்து இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது த.வெ.க. ஆட்சிக்கு அழகல்ல. முதல்வர் விஜய் கூட்டியுள்ள 2 நாள் மாநாட்டில் தலைமைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர் தலைமையில் மூத்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் முதல் தற்போதைய இளம் தலைமுறை அதிகாரிகள் வரை அத்தனை பேரும் பங்கேற்றுள்ளனர்.

அவர்களிடம் முதல்வர் விஜய் தனது அரசின் நோக்கங்களை தெளிவுபடுத்தி இருக்கிறார். சட்டத்தின் அடிப்படையில் சுதந்திரமாக முடிவு செய்யலாம். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், எவ்வளவு உயர்வானவர்களாக இருந்தாலும், பாரபட்சமின்றி சட்டப்படி உடனடியாக துரிதமாக நடவடிக்கை எடுத்து உரிய தண்டனை பெற்றுத்தர வேண்டும். அதில் நிரபராதிகள் யாரும் தப்பித்தவறி கூட பாதிக்கப்பட்டுவிடக் கூடாது. மாவட்ட ஆட்சியர்கள் அனைவரும் ஒவ்வொரு மாதமும் சட்டம்ஒழுங்கு கூட்டத்தை நடத்தி, சம்பந்தப்பட்ட துறைகளை ஒருங்கிணைத்துச் செயல்பட வேண்டும்.

ஒவ்வொரு முக்கியமான வழக்கிலும் சட்ட வல்லுநர்களோடு கலந்தாலோசித்து, தவறு செய்தவர்கள் தப்பித்துவிடாத வகையில் உடனடியாகத் தீர்வு கிடைப்பதற்கு சட்ட நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும். மாவட்ட ஆட்சியர்கள், வருவாய்த்துறையினர் மற்றும் காவல்துறையோடு கலந்தாலோசித்து, எந்தவொரு சம்பவமும் நடப்பதற்கு முன்னதாகவே மூலகாரணத்தைக் கண்டறிந்து, குற்றச் சம்பவங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டம்ஒழுங்கு பாதிப்பை ஏற்படுத்துபவர்களின் நடத்தையில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.

இதற்காக, வருவாய்த்துறை, காவல்துறை அனைத்துத் தகவல்களையும் சேகரித்து, அதைச் சரிபார்த்து, முன்பாகவே என்ன நடக்கும் என்று கணித்து அதற்கேற்றவாறு செயல்பட வேண்டும். முக்கியமாகப் பெண்கள் பாதுகாப்பை நூறு சதவீதம் உறுதிப்படுத்த வேண்டும். பெண்களின் பாதுகாப்



தினகரன்
ஜூலை 1, 2026 புதன்கிழமை
நடவடிக்கை தேவை
சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் விஜய் தலைமையில் ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகளுடனான இரண்டு நாள் மாநாடு நடந்து கொண்டு இருக்கும் வேளையில் தமிழ்நாடு முழுவதும் ஒரே நாளில் 9 கொலைகள் நடந்து இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது தவெக ஆட்சிக்கு அழகல்ல.
முதல்வர் விஜய் கூட்டியுள்ள 2 நாள் மாநாட்டில் தலைமைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர் தலைமையில் மூத்த ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் முதல் தற்போதைய இளம் தலைமுறை அதிகாரிகள் வரை அத்தனை பேரும் பங்கேற்றுள்ளனர். அவர்களிடம் முதல்வர் விஜய் தனது அரசின் நோக்கங்களை தெளிவுபடுத்தி இருக்கிறார். சட்டத்தின் அடிப்படையில் சுதந்திரமாக முடிவு செய்யலாம். தவறு செய்தவர்கள்

பிற்கு உரிய சிறப்பு ஏற்பாடுகள் செய்தே ஆக வேண்டும். மாணவர்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கும் முக்கியக் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறியிருக்கிறார். விவசாயிகள், மீனவர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோரின் கூட்டத்தை முறையாக, சரியாக, கனிவோடு நடத்த வேண்டும்.

மனு கொடுக்க வருகிற மக்களிடம் கனிவாகக் குறைகளைக் கேட்டறிந்து அவர்களுடைய பிரச்சினை என்னவென்பதை புரிந்து கொண்டு உடனடியாக அதற்குரிய நடவடிக்கையை எடுத்துத் தீர்வு தர வேண்டும் என்று தெளிவுபடுத்தி இருக்கிறார். போதைப்பழக்கத்தை பொறுத்தவரையில் புலம் பெயர் தொழிலாளர்களை கண்காணிக்க முதல்வர் அறிவுறுத்தி இருக்கிறார். மேலும் போதைப் பொருட்கள் கடத்தல் நடவடிக்கையை முற்றிலும் தடுத்து நிறுத்த போலீசாருக்கு அறிவுறுத்தி இருக்கிறார்.

அத்தனை அறிவுரைகளும் சரிதான். ஆனால் தமிழ்நாடு முழுவதும் கொலை, கொள்ளை, பலாத்காரம், போதைப்பொருள் புழக்கம் கட்டுக்கடங்காமல் அதிகரித்து வருகிறது. போலீஸ் துறையை கையில் வைத்து இருக்கும் முதல்வர் விஜய் இப்போது சாட்டையை சுழற்ற வேண்டிய நேரம். இனியும் முந்தைய தி.மு.க. அரசு மேல் பழி சுமத்த முடியாது. கடும் நடவடிக்கை தேவை. அப்படி எடுத்தால் தான் சட்டம், ஒழுங்கு கட்டுக்குள் வரும். காரணம் சொல்லி இனிமேல் முதல்வர் விஜய் தப்பிக்கவும் முடியாது. அதை தமிழ்நாடு மக்கள் ஏற்க மாட்டார்கள்.

இவ்வாறு ‘தினகரன்’ தலையங்கத்தில் முதல்வர் விஜய்க்கு ஆலோசனை வழங்கியுள்ளது.



கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், செமபுதூர் ஊராட்சி,அஞ்சுரான்பட்டி கிராமத்தில் ரூ.16.45லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீத கண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் முத்துக்குமார், ஒன்றிய பொறியாளர் சித்ரா, கிளைச் செயலாளர்கள் சுரேஷ், குமார், மாடசாமி எட்டையாபுரம் பேரூர் கழக துணை செயலாளர் மாரியப்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### மாதவரம்

# ஜி.பார்த்தசாரதி தந்தை கோவிந்தராஜ் மறைவு!

சென்னை, ஜூலை 2 -
சென்னை வடகிழக்கு மாவட்டம் மருத்துவரணி தலைவர் ஜி.பார்த்த சாரதியின் தந்தை கோவிந்தராஜ் அவர்கள் நேற்று முன்தினம் மறைவுற்றார் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம். செய்தியறிந்ததும் சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.சுதர்சனம் மறைந்த கோவிந்தராஜ் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

அதுபோது பகுதி செயலாளர் ஜி.துக்காராம் மண்டல குழு தலைவர் எஸ். நந்தகோபால், மாமன்ற உறுப்பினர் திருமலை துரைசாமி மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் எம்.எம்.டி. டாக்டர் கோபால் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை — இளைஞரணி

# கிங் கார்த்தி தாயார் திருமதி கே.கண்ணாத்தாள் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சிவகங்கை, ஜூலை 2 -
சிவகங்கை மாவட்ட தி.மு.க. இளைஞரணி துணைஅமைப்பாளர் கிங் கார்த்தியின் தாயார் கே. கண்ணாத்தாள். காஞ்சிரங்கால் முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர்.


இவர் தனது சொந்த ஊரான அரசனேரி கீழமேட்டில் மறைவெய்தினார்.

அவரது உடலுக்கு தி.மு.க.வினர் மற்றும் பல்வேறு கட்சிபிரமுகர்கள் மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து இறுதிச் சடங்குகள் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புலவர் கோவிந்தன்
### ஜூலை 2 (1991)



1937ஆம் ஆண்டில் தமது இருபதாவது வயதில் பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்தவர். பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, தலைவர் கலைஞரின் உற்ற தோழனாக இருந்து இளமை மிடுக்கு மாறாமல், கழக அடலேறென அயர்வின்றி பணியாற்றியவர்.

1958ல் திருவத்திபுரம் ஊராட்சி மன்ற உறுப்பினராகவும் 1962லிருந்து தொடர்ந்து பத்தாண்டுகள் தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், 1967ல் சட்டப்பேரவையின் துணைத் தலைவராகவும், 1969 பிப்ரவரி முதல் பேரவையின் தலைவராகவும் பொறுப்பேற்று மாற்றுக் கருத்துக் கொண்டோரும் போற்றும் வகையில் திறம்பட பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணாவிடம் நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.


தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும் விழாவில் இவருக்கு “அண்ணா விருது” வழங்கி சிறப்பித்தார்.

“கழகத்தையும் பொதுப்பணியையும் இரு கண்களாகக் கொண்டு செயலாற்றிய அந்தச் செந்தமிழ் அறிஞரின் புகழ் என்றும் நிலைக்கும்!” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவரங்கம் க.இராசவேலு
### ஜூலை 2 (2013)



நீதிக்கட்சி குடும்பத்தைச் சேர்ந்த இவர், பள்ளிப் பருவத்திலேயே திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, பின்னர் கழகம் துவங்கப்பட்ட போதே, கழகத்தில் இணைந்து பணியாற்றத் தொடங்கியவர்.

திருவரங்கம் பகுதியில் கழகம் வளர பாடுபட்ட மூத்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

மதி எனும் இதழை நடத்தியும், நாடகங்கள் எழுதி அதில் நடித்தும், ‘செண்பகத் தமிழ் அரங்கு’ எனும் தமிழ் அமைப்பினை தொடங்கி, அதன் மூலம் ஆயிரக்கணக்கான தமிழிலக்கியக் கூட்டங்கள் நடத்தி தமிழ் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

திருவரங்கம் நகர்மன்ற எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்றி அந்நகர வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

திருவரங்கம் ரங்கநாதர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

2010ல் தமிழ்ச் சான்றோர் பெருமக்களுக்கு வழங்கும் விழாவில் ‘அகவை முதிர்ந்த தமிழறிஞர்’ எனும் விருதினை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**